# மூச்சுக்காற்றின் முணுமுணுப்பு!

கவிதைகள்



ராணி சீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூச்சுக் காற்றின் முணுமுணுப்பு

## கவிதைகள்

ஆசிரியர்:

**ராணி சீதரன்**

பதிப்பாசிரியர்:

**முனைவர் லேனா தமிழ்வாணன்,** எம்.ஏ.,
டிப்ளமோ இன் ஜர்னலிசம்

**மணிமேகலைப் பிரசுரம்**
தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எண் 4), தணிகாசலம் சாலை,
தியாகராயநகர், சென்னை – 600 017.
தொலைபேசி : 2434 2926, 2434 6082
மின்அஞ்சல் : manimekalaiprasuram@gmail.com
மின் இணையம் : www.tamilvanan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | மூச்சுக் காற்றின் முணுமுணுப்பு |
| ஆசிரியர் | ராணி சீதரன் |
| மொழி | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | 2019 |
| பதிப்பு விவரம் | முதற் பதிப்பு |
| உரிமை | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | கிரெளன் சைஸ் (12 x 18 செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | Vi + 94 = 100 |
| நூலின் விலை | **ரூ. 70.00** |
| அட்டைப்பட ஓவியம் | மோகன் கிராஃபிக்ஸ் |
| லேசர் வடிவமைப்பு | பி.எஸ். முத்து கிராஃபிக்ஸ்<br>சென்னை - 600 015. |
| அச்சிட்டோர் | ஸ்கிரிப்ட் ஆஃப்செட்<br>சென்னை - 600 094. |
| நூல் கட்டுமானம் | தையல் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிப்பொதிவு


| | | |
|---|---|---|
| 1. | பொழுதே நீயும் நில்லாயோ? | 1 |
| 2. | கிராமத்து நினைவு | 3 |
| 3. | போதிமரமும், பொங்கிய பாலும் | 6 |
| 4. | தாய்மை | 10 |
| 5. | ஆசிரியம் | 12 |
| 6. | கணக்கெடுப்பு | 13 |
| 7. | இருந்துவிடு அங்கே! | 18 |
| 8. | உயிரின் தேடல் | 23 |
| 9. | பூத்தது புதுவருஷம் | 26 |
| 10. | எழுந்திடுக! | 30 |
| 11. | உயிர்ச் சுமை | 32 |
| 12. | கனவு | 33 |
| 13. | போர் | 35 |
| 14. | மறுபடி எழுவர்! | 37 |
| 15. | நினைவுகளில் தோய்தல் | 41 |
| 16. | பாதை திறக்காதா? | 43 |
| 17. | ஓதுவது வேதம் | 45 |
| 18. | முதுமை | 46 |
| 19. | திருவிழா | 48 |
| 20. | மழை | 51 |
| 21. | சுயம்வரத் தாலி | 53 |
| 22. | இசைதல் | 54 |
| 23. | 'ஏ'க்கா ஏக்கம் | 55 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. புலமைப்பரிசில் பரீட்சை 58
25. மூச்சுக் காற்றின் முணுமுணுப்பு 59
26. வக்கிரப் பூக்கள் 64
27. படைப்பு 65
28. திறவுகோல் 67
29. வாழ்க்கை 68
30. காதல் புத்தகம் 70
31. புகலிடப் பரீட்சை 71
32. ஏதிலியர் கழகம் 74
33. உறவும் நட்பும் 76
34. கவிதை 77
35. தமிழின் உறவு 78
36. பர்தா அணிந்த பாவை! 79
37. மரணத்தின் வலி 82
38. பொழுதும் புலராதோ? 85
39. ஏழ்மை 89
40. அகால மரணம் 91


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முணுமுணுப்புக்குச் செவி கொடுங்கள்!

உரத்துச் சொல்ல முடியாதவற்றை முணுமுணுப்பின் மூலமாவது வெளிப்படுத்தினால்தான் மனப்பாரம் குறையும். இந்தக் கவிதைகளும் அப்படித்தான். வலி சுமந்தபொழுதுகளில் வாய்விட்டுச் சொல்ல முடியாத சோகங்களை இதயத்தின் துடிப்புகளோடு ஐக்கியப் படுத்திக்கொண்ட அனுபவப் பதிவுகள்.

நாம் நடந்துவந்த பாதையில், கடந்த துயர வெளிகளை நினைவுபடுத்தும் கணங்களுடன் ஐக்கிய மாகிப் போகவும், அந்த வடுக்கள் நிறைந்த தடயங்களை மீட்டிப் பார்க்கவும் உதவுகின்ற ஆவணமாக இந்த எழுத்துக்கள் பயன்படும் என நினைக்கின்றேன்.

சில தருணங்கள் எனக்குள் எழுப்பிய விடைகாண முடியாத வினாக்களினால் பாதிக்கப்பட்டவள் நான். ஏன்...? எதற்கு? என்ற கேள்விகளைக் கேட்டபடி எனக்குள் எரிமலையாகக் குமுறியிருக்கிறேன். ஆர்ப் பரிக்கும் கடலாய் கொந்தளித்த பொழுதுகளும் உள்ளன. அப்போதெல்லாம் என்னை ஆசுவாசப்படுத்தியவை என் எழுத்துக்கள்தான்.

இக்கவிதைகள் பலவற்றில் திருகோணமலை மண்வாசத்தை நுகரலாம். அந்த வாசம் நிச்சயமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் பரவசத்தை ஏற்படுத்தப் போவதில்லை. கடந்துவந்த பாதையின் துயரவலிகளை ஞாபகப்படுத்து வதாக இருக்கலாம். அங்கே முகங்கொடுத்த அனுபவங்களால் அவ்வப்போது நான் வெளிப்படுத்திய பெருமூச்சுக்கள் அடக்கி வாசிக்கப்பட்ட முனுமுனுப்பு களாக வெளிப் படுத்தப்பட்டுள்ளன. இவை உங்கள் செவிகளில் ஒலித்து நச்சரிப்பைத் தரலாம். அல்லது நினைத்துப் பார்த்து நிம்மதியடையவும் செய்யலாம். ஏனெனில் முன்னோக்கி நகரும் வாழ்க்கையைப் பின்னால் திரும்பிப் பார்த்துப் பயணிப்பதனால் பட்டறிவின் முதிர்ச்சி மனதைப் பக்குவப் படுத்துமென நம்புகிறேன்.

ராணி சீதரன்
raniseetharan@gmail.com
27.11.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூச்சுக் காற்றின் முனுமுனுப்பு

## 1

### பொழுதே நீயும் நில்லாயோ?

*(1996 உலக ஆசிரியர் தினம் திருகோணமலை சென்மேரிஸ் கல்லூரி - ஆசிரியர் தேசிய மட்டக் கவிதைப்போட்டியில் பரிசு பெற்ற கவிதை)*

புலர்ந்தும் புலரா விடியலிலே,
புள்ளின் புலம்பல் ஓசையிலே,
விழிகள் மூடித் தூங்கிடவே
விரையும் பொழுதே நில்லாயோ?

கையும் காலும் கடுகதியாய்
செய்யும் வேலை செய்த பின்னே,
சிவப்புக் கோடு தாண்டமுதல்
புறப்பட வேண்டும் பொழுதே நில்!


நெஞ்சக் குகையில் புதைந்திருக்கும்
சொந்தச் சுமைகள் பலகோடி
பிஞ்சு முகங்களைப் பார்த்தாலே!
நெஞ்சம் நிறையும் பொழுதே நில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறிய மனமேட்டில்
மென்மை உணர்வை விதைத்திட்டால்
கொடுமைக் களைகள் அரும்பாது
விடிவைக்காணப் பொழுதே நில்!

வகுப்பறை எங்கள் வீடாக்கி
இனப்பகை அனைத்தும் நீறாக்கி
சமத்துவப் பூக்கள் மலர்வதற்கு
சத்தியம் செய்தோம் பொழுதே நில்!

விழுமியங் கூறும் காவியத்தின்
அழகிய பொருளே நாமாகி
பழுதிலா உலகைப் படைத்திடவே
எழுவோம் எமக்காய் பொழுதே நில்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

# கிராமத்து நினைவு

பூவாசமாய் மணம்பரப்பும்
கிராமத்து நினைவுகள்,
பசுமையாய் படர்ந்து
சுவாசத்தை நிறைக்கும்
வெற்றிடமாய் கிடக்கும்
வெளிகளில்
விழிநிமிர்த்தித் தேடல்
தொடர்கிறது.

பனங்காய்க் காலத்தில்
மொய்க்கும் ஈக்களாய்
இதயத்தின் மடிப்புகளில்
படிந்து கிடந்து
பரவசப் படுத்தும்
அழகுச் சுமைகள்.

தடயங்களாகி மனதைத்
தட்டிக் கொடுக்கிறது
வண்டி இழுக்கும்
காளைகளின் கழுத்தசைய
சுண்டியிழுத்துச்
சுதிகூட்டும் மணியோசை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலை வளைத்து
விசுக் விசுக் கென்று
பகையைத் துரத்தி
வலிசுமக்கும் மாடுகள்
கற்றுத்தருபவை கனக்கும்

புலர்பொழுதின் மெல்லிருளைக்
கதிர்க்கரங்கள் விலக்க
பாசத்தில் பால்சுரந்த
ஆவின் அழைப்போசை
அயலை எழுப்பும்

ஊருறங்கிப் போனாலும்
நாமுறங்கவில்லையென
தாளம் பிசகாத இசையோடு
ஓசையெழுப்பும் காலக்கடிகாரமாய்
பாடல்படிக்கும் சேவற்குரல்கள்...!

மொத்தக் கனவுகளின்
முழுவடிவம் தபால்காரன்
கடிதக்கட்டுக்கள்
கடவுள் தந்த வரமாக
வீட்டு வாசலிலே
விசில் அடிப்பான்

வசந்தத்தின் வரவுரைக்கும்
மாமரத்துக் குயிலுக்கு
எதிர்த்துக் குரல்கொடுக்க
சலித்துக் கொள்ளாது
ஆங்காரத்தோடு
அறையும் குயிலோசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுகள் அனைத்தையும்
அடக்கம் செய்ததால்
அழுகுரலும், அடிதடியும்
வாசல்வரை ஒலிக்க
சின்னத்திரையோடு பலர்
பின்னிக் கிடக்கின்றார்
பெருவாழ்வுப்பேறை
அள்ளித் தருகின்ற
அட்சயபாத்திரமாம்
கையடக்கத் தொலைபேசி

தனிமைப்படுத்திவிட
தனக்குத்தான் துணையாய்
உறவுச்சங்கிலி
அறுபட்டுக் கிடக்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

## போதிமரமும் பொங்கிய பாலும்

*(திருகோணமலைப் பேருந்து நிலையத்தில்
புத்தர் சிலை வைத்தபோது)*

எங்கள் ஊர்களிலே
கிளை பரப்பும் ஆலமரங்கள்
அரியாசனமிட்ட
வைரவரும், கணபதியும்
காவல் தெய்வங்கள்

பொங்கல் படையலில்
பூரித்த காலங்கள்
பொய்மானாக
ஆலமரங்கள் எல்லாம்
போதிமரங்களாகின.

திடீரென்று
திருமலை பஸ்தரிப்பில்
பஞ்சசீலங்களைப்
பறைசாற்றி
யோக நித்திரையில்
புத்தர் சிலை
ஞானமுரைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவினை ஒப்பிற்கு
பக்குவப்படாதோர்
மலபரிபாகத்தை
மறுவிசாரணை செய்ய
மௌனத் தவத்தில்

ஆத்மச் சுடர் தவழும்
பரிநிர்வாண தத்துவத்தை
பங்கப்படுத்தியது
மீன்வாடிஅருகிருக்கும்
காய்ந்து மணக்கும்
கருவாட்டுச் சந்தை!

மதுபானக் கடைக்கும்
மௌனமொழிக்கும்
புதுப்பொருத்தம்
அழுக்குநீர் ஓடுகின்ற
கழிப்பிடத்துக்கால்வாய்
யோக நித்திரையைத்
தாவிக் கெடுத்தது

இயற்கைத் துறைமுகம்
இருக்கின்ற காரணத்தால்
ஈழத்திருநகரின் தலைநகராய்
ஆழ நினைப்பதை அடக்கி,

பிரம்மாக்களின் அவதாரம்
நீங்களில்லை
அழித்தழித்து எழுதுகின்ற
அதிகாரம் எங்களிடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்திடுக! என்று
போட்டார் விலங்கு

தையொரு
திங்களன்று
ஐவர் இளைஞர்
ஆசைத் தவப்புதல்வர்
கடற்காற்றை சுவாசித்து
விடைபெற்றவேளை...

கொலுவைத்த பொம்மைகள்
பலிக்காகச் சென்றதுபோல்
காவற்படை அழைக்கக்
காரணத்தை தெரியாமல்
ஆவலுடன் சென்றார்

கைகளைப் பின்புறத்தில்
பிணைத்த பின்பு
அடுக்கடுக்காய் படுக்கவிட்டு
செவிப்புலம் குறிவைத்து
உயிர்க்குருத்தை ஒடித்தார்கள்!

சிதறிய செந்நீரால்
சிவந்தனள் பூமித்தாய்
சுமந்த கருவறைகள்
துடித்துத் துவண்டன.

அன்று,
நகரமெங்கும்
சுனாமிப் பேரலையாய்
ஆர்ப்பரித்தது திருமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஷ்பக விமானத்தைத் துரத்திய
இராமபாணங்கள்
அடுப்பணைந்த போது
பொங்கிய பாலாய்
அமர்ந்து போயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4

# தாய்மை

**ப**த்துத்திங்கள் தவமிருந்து
பத்தியங் காத்து வளர்த்தெடுத்த
தத்துவப் பொருளாம் அன்னைக்கு
சமத்துவம் சொல்ல யாருண்டு?

பிஞ்சுக் கால்கள் மிதிக்கையிலும்,
கொஞ்சும் மழலைக் குரலினிலும்
நெஞ்சம்நிறையும் தாய்மைக்கு
நிகராய் இங்கே யாருண்டு?

உதிரம் உணவாய் ஊட்டிடுவாள்,
உலகம் இதுவெனக் காட்டிடுவாள்,
தன்னலங் கருதாத் தாய்மைக்கு
தரணியில் யாரைக் கூறுவதோ?

கண்ணில் தூசி விழுந்தாலும்,
கலங்கிப் போகும் தாயுள்ளம்!
பொன்னாய் பூவாய் போற்றுகின்ற
அன்னை அன்பு அமுதாகும்!

ஆணோ பெண்ணோ என்றறிய
ஆசைக் கனவில் மிதந்திடுவாள்!
சின்னக் குழந்தைச் சிரிப்பினிலே
சினத்தைக் கொன்று மகிழ்ந்திடுவாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளி செல்லும் வேளையிலே,
பணிவிடை செய்து அனுப்பியபின்
உள்ளம் சோர்ந்து வரும்வரையும்
ஏக்கம் சுமந்து காத்திருப்பாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5

## ஆசிரியம்

புலர் பொழுதின்
ஆர்ப்பரிப்பைச் சுவாசித்தபடி
புதுமணப்பெண்ணாய்
காலடிபதிப்பாய் பள்ளியில்.
உறைபனியும், எரிமலையும்
உனது உணர்வு வலயங்களைத் தீண்டும்
நீயோ...
அட்சயபாத்திரமாகி
வகுப்பறை உயிர்ப்புகளோடு
இருப்பைப் பதியமிடுவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6

## கணக்கெடுப்பு

*(போர் நிறுத்த ஒப்பந்தத்தின் போது)*

**போ**ரை நிறுத்தியாச்சு!
புறாவெங்கும் பறக்கிறது
ஏறியிறங்கும் இன்னலும்
குறைந்திடுச்சு!

உயிரை உறுதி செய்யும்
'ஐடென்ரி' தேவையில்லை
இரவு பகலெல்லாம்
எங்கும் போய்வரலாம்
முகமூடித் தொல்லையில்லை
மூடுவான் ஓடவில்லை
தடைபோட்ட எல்லையெல்லாம்
தவறாமல் போய் வரலாம்

என்ன வந்துமென்ன...?
காவேரி
எண்ணைப் பிரளயத்தில்
உருகி உருக்குலைந்து
கருகிச் சருகாகி
காற்றோடு போகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்குழந்தை இடுப்பினிலே
கறிசோறு தலையினிலே
வாட்டுகின்ற வெயிலிலே
வயல் நோக்கிப் போகின்றாள்.

இன்று மட்டுமல்ல,
என்றுமே இப்படித்தான்
போர்நிறுத்தம் வந்துமென்ன
இவள்
நெஞ்சுப் புழுக்கமின்னும்
மாறவில்லை...

அன்றொருநாள்
கோழிக்கறி சமைத்துக்
கொதிக்கின்ற வெயிலிலே
பொதிச்சோறு கொண்டு வந்தாள்
புருஷனுக்கு,

போதை வெறியில்
காவல் படையிலுள்ளான்
கட்டைக் கறுப்பனவன்
தாவிப் பிடித்தான்
தலைமயிரை

வீரை விளா நாயுருவி
பேர் தெரியா பெருமரங்கள்
அடர்ந்து வளர்ந்திருக்கும்
பெருங்காட்டுப் பகுதிக்குள்
போ! என்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழிக்கறி சுவைக்க
கசக்கிப் பிழிந்து
கட்டிப்பால் எடுத்து
வீசியெறிந்த
வெறுந்தேங்காய்ப் பூவானாள்.

கடும்பசியில் காத்திருந்த
காட்டுப்பூனைக்கு
வீட்டுக்கோழி
விருந்தாகிப் போனதுபோல்,

சொல்ல முடியாத
வேதனையும், வெந்துயரும்
நோதரவே
மெல்ல எழுந்தாள்

வீட்டுக்குச் சென்று
வெந்நீரால் உடல் கழுவி
மூலைச் சுவரோடு
முடங்கிக் கிடந்தாள்

வேலை செய்த களைப்பு
வெறும் வயிற்று இரைச்சல்
பசிபோக்க
வடிவாங்கிக் குடித்துவிட்டு
வந்தான் வடிவேலு

ஆக்கி நல்லாய் முழுங்கி
'அனந்த சயனமோ'
கேட்டபடி அவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கி உதைத்தான்
ஊமையாய் உறைந்தாள்

காட்டிலே நடந்த கதை
காற்றிலே போயாச்சு!
ஆண்டொன்று கழிந்து
அவள் கையில் குழந்தை
பேச்சுத் துணையாச்சு

கள்ளச் சிரிப்போடு
மெல்ல வருவான்
இராணுவத்து அதிகாரி
பிள்ளையின் கன்னத்தில்
பிரியமுடன் கிள்ளி
'புத்தா' என்பான்
புரியாது அவளுக்கு

இப்பவெல்லாம்
ஊருக்குள் பலர் வருவார்
சமூகசேவை, புனர்வாழ்வு,
பாதிக்கப்பட்டோர் பட்டியல்
சேகரிப்போர் வரிசையிலே

'கணக்கெடுப்பு' என்றே
வந்தான் ஒருவன்
வழிமறித்தான்
அக்கா
'அவர் எங்கே' என்றான்
ஆவேசத்தோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலிலே வேலை
வந்த செய்தி சொல்லென்றாள்
தயங்கினான்
கணநேர மௌனம்
கலைத்தபின்
இடுப்பிலுள்ள பிள்ளை
எனதென்று சொல்லுமவன்
தோலையுரிக்கத்
துடிக்கிறது கையென்றான்

இருக்காதா?
இளைஞனின் உணர்ச்சிவெறி
பிடரியில் பிடித்தவனை
உடல் சிதற நசித்து
குருதியில் குளிப்பாட்டிக்
கோபம் தணிக்க
குறுகுறுத்தான்

புலையனின் கண்ணிற்குப்
புலப்பட்ட தாலி கண்டு
வலையிலிட்ட மானாய்
வருந்திய பெண்ணிடம்
விவரமவன் கேட்டதுமே
வெந்து கருகினாள்
அந்தோ!
அனலில் மெழுகாகி
அவலச் சிலையாகி
கவலைக் கனலுக்குள்
கருகினாள் காவேரி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

## இருந்துவிடு அங்கே

*(இலங்கையில் போர் நடைபெற்றபோது)*

என் அன்புத் திருமகனே
ஆசைக் குலக்கொழுந்தே!
வந்து விட்டுப் போவதாய்
வருசமெல்லாம் சொல்லுகிறாய்...

இன்றோடு அந்நினைவை
இதயத்தில் எடுத்துவிடு!
காணத் தவிக்கின்றேன்
கதை பேசத் துடிக்கின்றேன்
ஆனாலும் அமைதியுறுகின்றேன்.

ஓடியல் கூழ் ஆசையென்றாய்
ஓராமீன் காலமென்றாய்
கறுத்தக் கொழும்பானை
அறுத்துத் தாவென்றாய்
பெற்ற மனமிங்கே
பேதலித்துப் போகுதய்யா...!

காணியிலே வைத்தகல்லு
கடுகளவு பிசகினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதாடி வழக்கெடுத்தோம்
எல்லை கடந்து விட்டோம்
எங்கெங்கோ சிதறி விட்டோம்
சொல்ல முடியாத சோகத்தால்
வாடி வலுவிழந்தோம்

மூளாய்க் கடற்கரைக்கு
முழு மூச்சாய் போய்வந்து
சட்டி கொள்ளா இறாலும்
சதைமிக்க நண்டும்
கொண்டுவந்து குவிப்பாய்!
குந்தி இருந்து
குதிக்காலும் நோகுமய்யா!

இறால்வறையும் புட்டும்
வாய் ருசிக்க உண்ண
பாடுபட்ட வருத்தம்
பறந்துவிடும் என்பாய்!

வைரவருக்கு
வைகாசிப் பொங்கல் வரும்
நல்ல சுளைப் பலாப்பழமும்
நலமான பழக்குலையும்
சொல்லி வைத்துக் கொண்டுவந்து
சோக்கான படையல் செய்து
உறவுக்குக் கொடுத்ததெல்லாம்
தொலைதூரக் கனவாகி
தொலைந்துதான் போனதய்யா...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடியும் சொல்லுகிறேன்
மறந்தும் நீ வரவேண்டாம்
பாசம் இருக்குமய்யா...
பறித்தவுயிர் மீளாதய்யா!
நாட்டு நிலையிங்கே
நல்லதாயில்லை
பார்த்த இடமெல்லாம்
மனிதச் சடலங்கள்
மரண ஓலங்கள்

குருதி வெள்ளத்தில்
குளிக்கும் நிலமகளை
பருவமழை வந்து
பார்த்து விட்டுப் போவதுண்டு

உண்பதற்கு வாய் திறந்தால்
உயிர் குடிக்கும் துப்பாக்கி!
வாசல் திறந்து வந்து
வரவேற்கும் காலமில்லை
கோயிற் சன நெரிசலிலே
கொள்ளையடிப்பது போல்
மனிதக் களவுகள்
மர்மமாய் நடக்குதிங்கே!

விஷமேறிச் செல்வதுபோல்
விலைவாசி ஏற்றமிங்கே
காசால் உயிர்பிடித்துக்
காத்திருக்கும் காலமிது
ஏதேதோ பேசுகிறார்
ஏரோ செழிக்கவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரொன்று மட்டுமே
புரையோடிப் போயிருக்கு

பாதை திறப்பதற்குப்
பாடுவோர் யாருமில்லை
ஆதரவை இழந்து விட்டோம்
அகதிகளாய் ஆகிவிட்டோம்

கனவொன்று நான் கண்டேன்
கணமேனும் இருக்காதே!
'போகலாம் புறப்படுவாய்'
கனிவாகப் கொப்பரென்
காதினிலே சொல்லுகிறார்
கண்விழித்தேன் அவ்வளவே!

சாகும் நேரமென்னைச்
சந்திக்கும் வேளை
வெகுதூரத் தொலைவிலில்லை
வெந்துமனம் தவிக்கிறது
பத்து வருடங்கள்
பிள்ளை வரம் கேட்டு
கோயில் குளமெல்லாம
கும்பிட்டு எழுந்தேன்

கந்த சஷ்டியோடு காப்புவிரதமும்
சந்ததி பெருகவென்று
நொந்து வருந்தி
நோற்றதன் பயனாக
மைந்தனாய் வந்துதித்தாய்
எந்தப் பிறப்பிலினி
எழில் முகத்தைப் பார்ப்பேனோ...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளி வைக்கப் பிள்ளையென
கோடி தவம் செய்தோமே!
புண்ணியத்தின் மெய்ப்பயனாய்
கண்மணியே நீ வாழ்வாய்.
எண்ண முடியாத அவலங்கள்
சொல்லி அழியாது
அரைவயது கால் வயதில்
பறிமுதலாய் போகுதுயிர்!

உனக்கென்று தேசமில்லை
உருவாகும் நேரமில்லை
பொறுத்துக்கொள்
உழைப்பிற்குச் சென்றிருந்தாய்
உரிமையும் பெற்று விட்டாய்
வெள்ளைத்தோல் நட்புடனே
இருந்துவிடு அங்கேயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8

## உயிரின் தேடல்

*(தமிழ் மக்கள் யுத்தத்தினால் இராமேஸ்வரத்திற்கு அகதிகளாக இடம்பெயர்ந்தபோது)*

யுத்தத் தீயில் பற்றியெரிந்தது
நான் பிறந்த மண்.
மண்ணென்ன மனதுந்தான்...
'இடப்பெயர்வு'
காதலியை விட்டுவிட்டு
நாடுவிட்டு நானேக
கரும்பா எனக்கு உயிர்?

விரும்பாத அப்பா
விதித்தார் தடைச்சட்டம்
ஆசைத் தீப்பற்ற
விடை கேட்க விரும்பாது
காதல் தேசத்தை
வெளிக்கிடு விரைந்தென்றேன்

கணப்பொழுதில்
உறவுகளை உதறிவிட்டு
உன்னிடமே தஞ்சமென்று
நிறைமதியின் பொலிவோடு
நிழலாகத் தொடர்ந்து வந்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலியின் கைப்பிடித்தேன்
கடலினிலே பயணித்தோம்
மரணபயம் குரல்வளையை அமுக்க
ஓலமிட்ட ஓசை தேசமளக்க
பாசமுடன் அவள் பார்த்தாள்

மனித வெள்ளம் ஆர்ப்பரித்து
ஆழக்கடலில்
அலை நடுவில்
அகதி என்ற பெயரில்
மோதித்தவித்தது

பொங்கினாள் கடலன்னை
அலையாய் புரண்டெழுந்தாள்
படகிலிருந்தோர் பாவம்
தூக்கியெறிந்ததினால்
பேச்சடங்கிப்போனோரும்
முகவரியை இழந்தோரும்
மூச்சடங்கிக் கிடக்க

கண்ணிமைக்குள் சிறைப்பிடித்த
கட்டழகை
கைப்பிடிக்குள் வைத்தபடி
தத்தளித்து நீந்தி வந்தேன்
பத்திரமாய் உயிர் பிடித்த
பரவசத்தில்

கிட்டவந்தோர் சத்தமிட்டார்
அவளை விட்டுவிடு
தண்ணீரில் போகட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியே நீ வாவென்றார்
பொறாமையென்று பொறுத்தேன்,

மனம் புழுங்கியது
புத்திகெட்டுப் போனீரோ?
பொக்கிஷத்தைப் போக விடுவேனோ?
பித்தரைப்போல் பிதற்றாமல்
பேசாமல் போமென்றேன்

உயிர் பிரிந்து போனபின்பு
உடல் சுமக்கும் நேரமிதோ?
''கைவிடு'' என்று கடிந்தார்
கைப்பிடியைக் கழற்றினார்
உயிர் கருகிச் சுருண்டேன்

ஆசையாய் கொண்டுவந்தேன்
பேசாமல் போனாயோ?
தேடியே வருவேனென்று
தெரிந்து நீ போனாயோ?
வழியெல்லாம் தேடுகிறேன்
வடிவமே தெரியவில்லை

ஓடி நீ போனதெங்கே?
உன்னை நினைத்து
ஆவி துடிக்குதடி!
பாவி நான் சாகவில்லை
பார்த்துவிட்டுப் போவாயோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

# பூத்தது புதுவருசம்

*(திருகோணமலை மத்திய வீதியில்
வெடிகுண்டுத் தாக்குதல் நடைபெற்றபோது)*

வசந்தம் தருவதற்கு
வரவிருக்கும் வருடம்
பிறப்பதற்கு
இருநாட்கள் இருக்கையிலே
திருமலை நகரிலே
சனக்கூட்டம் திருவிழாவாய்

வெளிநாட்டு விருந்தினர்
விருந்திற்கு வந்தார்
வழியனுப்பி வைத்துவிட்டு
புத்தாடை வாங்க புறப்பட்டேன்

செவிப்பறை அதிர வைத்த
செவிடுபடும் சத்தம்
சடுதியாய் வெடித்தது குண்டு
சத்தமின்றி இறக்குமதியானார்
காடையர்கள்

கலிங்கத்துப் பரணியைப் போல்
திருமலை மத்திய வீதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதப் புரளி
உயிரைப் பிடித்து வைக்க
அவதிப்பட்டோர் பலர்

கோணேஸ்வரத்தானை
கும்பிட்டு வேண்டுகையில்
தட்டி உடைத்தார்கள்
சட்டச்சடவென்று
சுட்டு முடித்தார்கள்...!

போட்டியாய் வந்து நின்ற
பொல்லாத வாகனங்கள்
பூட்டாத வீட்டுப்பொருளாய்
கூட்டி அள்ளிக் குவித்து
ஏற்றின எல்லாமும்

அக்கினிக் குஞ்சு அரவணைத்த
மத்திய வீதி பற்றியது
கடைத்தெருவும் குடிமனையும்
கருகிப் பொசுங்கியது

பதுங்கியவர் கண்கள்;
வெதும்பியது புகையில்
உயிர்வேட்டைக் களத்தில்
உணர்ச்சிக் கொந்தளிப்பு;

வானரப் படைகளெல்லாம்
வந்துவிட்ட சங்கதியாய்
சேதங்கள்
சில்லறையாய் சிதறியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறிக்குள் எலியாய்
புழுங்கிய தவிப்பு
பயப்பேய் விரட்ட
சுயமிழப்பு
சுனாமி வந்த சுவடாய்
அநேக அவலங்கள்;
தாலிகட்ட நாள் பார்க்க
வங்கியிலே வைப்பெடுக்க
உடுதுணிகள் தெரிவுசெய்ய
அடுக்கடுக்காய் வேலையொடு
அழகுமிகும் பெண்கள் வந்தார்

இடைமறித்தார்
சற்றேனும் இரக்கமின்றி
வெற்றுடலாய் குற்றுயிராய்...
மற்றெதுவும் சொல்லொணா
மார்க்கமதில்...

பற்றையிலும்
கோயில் படியினிலும்
காகங்கள் கண்பிடுங்க
கடிநாய்கள் பதம்பார்க்க
மீதியுடலும் மிச்சமின்றிப் போக,

பேருமில்லை
ஊருமில்லை
பேரிழப்புத்தான்.
''காணவில்லை''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திரையில்
அச்சடிப்பு
தலைமறைவுப்
பட்டியலில்
பலர் அடக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

## எழுந்திடுக!

பெண்ணே!
உயர்ச்சியின் ஒவ்வொரு திருப்பமும்
உன்பெயரை உச்சரிக்கிறது
நீயோ...
உருகிப் போன மெழுகாயும்
கருகிப் போன மலராயும்
உருக்குலைந்தாய் ஏன்?

கன்னத்தில் காய்ந்து போன
கண்ணீர்த் தழும்புகள்
காதலுக்கும், குழந்தைக்கும்
காணிக்கையானவள்
பெண்ணென்று பேசுகின்றதே!

சிலையிலும் கலையிலும்
சிறைப்படுத்திய
சமூகவலையைக் கிழித்தெறியச்
சகுனம் பார்க்கிறாயா?
தாமதிக்காதே!

பொறுமையே பெண்ணென்ற
புதுமொழிக்குள் புகுத்துவார்
போனால் போகட்டுமென
இருந்துவிடாதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ப்புகள் ஜடமில்லை
காவியப் பெண்களை ஒப்பிட்டு
கனதிப்படுத்தி ஓவியமாக்க
உடன்படாதே!
உயிர்ப்பை அர்த்தப்படுத்தும்
உன் சுவாசிப்பின்
மூச்சுக்காற்று
புதிய விடியலுக்கான
சூரியக்கதிர்கள்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11

## உயிர்ச் சுமை

*(யுத்தத்தினால் இடப்பெயர்வு)*

உயிர் ஒன்றே சுமந்து வந்தோம்
ஊரை விட்டே ஓடி வந்தோம்
தேடி வைத்த பொருளும் கூடத் தெருவிலே
கோடி கோடியாய் உழைத்தும் பயனில்லை

மாடிமனை வாங்கி வைத்தோம்
மணிமணியாய் சேர்த்து வைத்தோம்
கூடி நாமும் சேர்ந்திருக்கக் கூடவில்லையே...!
கோடி பாவம் செய்தோமோ? யாருமில்லையே...!

வேட்டுச் சத்தம் குடல் கலக்கும்
வெடித்த குண்டு உயிர் குடிக்கும்
மூட்டை கட்டி முடிந்து வைப்போமோ?
உயிர்க் கூட்டைக் கொண்டு காத்திடுவோமோ?

ஆட்டமுடன் பாட்டும் இங்கு மறந்து போனதோ?
ஆலமரம் போன்றதொரு பலமும் போனதோ?
வேருடனே விழுதுகளும் கருகிக் காய்ந்ததோ?
போருடனே புதுமைகளும் புதைந்து போனதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12

## கனவு

வண்ண வண்ணமாய்
எண்ணக் கலவைகளை
என்னுள் குழைத்து
எழுதிய கனவுகள்
சின்ன பின்னமாய்
சிதைந்தன.

வானம்பாடியாய் வட்டமிட்டு
கானம்பாடிக் களிக்கவும்
இளமையை விரயப்படுத்தாது
இமயம் தொடவும்
சொர்ப்பனம் கண்டேன்.

என்னைப்போல
சின்னக் கனவைச் சுமந்தவர்கள்
ஏக்கப் பெருமூச்சைச் சுவாசித்து
விடிவைக் காணாது
அடிமை வலைக்குள் உயிர்ப்பு

துப்பாக்கி துளைத்த உடல்
ஆழக்கடலின் அலையிலகப்படும்
குறிவைத்துப் போட்ட
குண்டுகளால் சிதறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசம் தோறும்
ஆவிகளாய் அலையும்!

வானத்து நட்சத்திரங்கள்
வலுவற்றுப் போனதுபோல்
வால்வெள்ளிகளாயின
நிலாக்காயுமென்று
நிமிர்ந்தபோதெல்லாம்
அமாவாசை இருட்டு
அப்பிக்கொள்கிறது!

கனவுப் பூக்கள் மலருமென்று
உடல் பூந்துகள் உரமாகின
உயிர் விதைகள் பயிராகி
குருதி நீர்க் கொந்தளிப்பு
எழும்பிய முளை கருகியது
காலமகள் சிரிப்பாள்
கைவிலங்கை உடைப்பாள்
ஞாலமதில் நாமமொலிக்கும்
ஈழத்தமிழர் இவரென்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13

## போர்

பாதகர் போலெம்மை
மோதிட எண்ணிப்
பறந்திடும் எறிகணைகள்

கணமதுவேனும் இடைவிலகாது
தொடர்பணியாற்றும்
பல்குழல் பீரங்கி

உயிர் சுமையாகப்
பொதுவிடம் நாடி
புகலிடம் தேடி
அலைபடும் வாழ்விதுவே!


கொட்டு கொட்டென கொட்டி
சுட்டு முடித்திடும்
யுத்த விமானங்களே!

குண்டு மழையினில்;
குளித்திடும் வேளை
கண்கள் தெறிபடும்
கைகால் அறுபடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதி வளர்த்த
உடலும் சிதைந்து
உழுது விதைத்த
பயிர் முளை ஆகிடுமே!

ஆவியடங்கிய உடற் துகளோடு
காவி படிந்த நிலமகள் மீது
வாழ்வது கனக்க
எலும்புகளால் எல்லையிட்டு
எழுப்பிடுவோம் சுதந்திரத்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14

## மறுபடி எழுவர்!

உள்ளத்து உணர்வுகளைச்
சொல்லிச் சிரித்த பள்ளித் தோழியே!
நீ மட்டும் பலமைல்களுக்கு அப்பால்
மெல்லக் கனவுலகில் மிதந்திருப்பாய்!
என்போன்ற பெண்களிங்கு
ஏக்கச் சுமைகளினால் இதயம் பிதுங்க
துன்பத்தில் துடிக்கின்றார்!

கன்னப் பரப்பில் கண்ணீர்த் தழும்புகள்
நிரந்தரமாய் படிந்தது
இறுதிப் பரீட்சை எடுத்த வேளையை
எண்ணிப்பார்...!

சுற்றுலாச் சென்றபோது
பசிய மரங்களின் பக்க வேரை
நனைத்துச் சென்ற
குளிர்ந்த ஓடையில்
குளித்துக் களித்தோம்
கொஞ்சம் நினைத்துப் பார்!

உடுத்திய ஆடையை
உடம்பால் கழற்றிடாத
சுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை இழுத்து வந்து
தண்ணீருக்குள்ளே அமுத்தியபோது
மூச்சுத் திணறிய காட்சி
இன்னமும் கண்ணில் தெரிகிறது

செல்வச் செழிப்பில் சிலவற்றை
மறந்திருப்பாய்
அவலமே வாழ்வாக
அவையெல்லாம்
மறப்போமா...?

ஓடை நீருக்குள் ஓடி விளையாடப்
பயந்த சுமதி
ஆழக்குழியில் புதைக்கப்பட்டாள்

தேடித் தேடி தெருக்கள் தோறும்
தேய்ந்து போயின கால்கள்...
பார்த்துப் பார்த்து பார்வை நரம்புகள்
பழுத்து விட்டன!

அழுதோம் துடித்தோம் அரவமேயில்லை
ஆறுமாதம் கழிந்த பின்
அழுகிய உடலில் போர்த்திய புடைவை
'சுமதி இவள்' எனச் சுட்டியது!

புழுவும் பூச்சியும் அணிவகுத்திருக்க
பொறுமைப் பாசறையில்
மௌனத் தவம் புரிந்தாள்
அழகு முகத்தில் இறுக்கம்
தெரிந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஐ லவ் யூ' சொல்லும் ஆறுமுகத்தின்
சின்னமகன் செந்தூரன்
செருப்பாலே அடிவாங்க
'வாணி வம்பு வேண்டாம்' என
விலக்கி விட்டோம் நினைவிருக்கா...?

அந்த வாயாடிப் பெண்ணுக்கு
வாய்த்தவனோ குடிகாரன்
நிறைமாதச் சுமையுடனே
பசி வாட்டும் வயிற்றுடனே
குடிப்பதற்குக் காசு தர
கூலியவள் செய்கின்றாள்.

கணவனைக் காணாத
விதைவை வினோதா...
அன்பிற்கு ஏங்குகின்றாள்!
ஆணுதவி ஏதுமில்லை
பேசிச் சிரித்துவிட்டால்
'நடத்தை கெட்டவள்' என
நாமத்தைச் சூட்டுகிறார்!

திருமணத்தின்போது
மணமக்களை
அறுகரிசி போட்டு
ஆசிர்வதிக்கையிலே
மங்களத்தின் அருகில்
மணமகனைக் காணவில்லை
பாவம் இவள்
பூத்திருந்தாள் காத்திருந்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கிடும் உணர்வை
பொசுக்கினாள்
கைப்பிடியில் கற்பு வைத்த
கன்னிதான்
பைத்தியம் என்றேல்லோரும்
பட்டம் கொடுத்துவிட்டார்...!

போரென்று சொல்லி
புகுந்து விட்ட கொடுமை
சுற்றி வளைப்பு
சுட்டுக் குவிப்பு
பட்டுப் போனவர்
பெண்கள்தான்!

வாழ்விழந்தாள்
வலிசுமந்தாள்
அகதியாய்,
அநாதையாய்,
விதவையாய்,
விலைமகளாய்
மண்ணுள்ளே
புதைந்தனர்
மறுபடி
எழுவர்
மறக்குலமகளிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15

## நினைவுகளில் தோய்தல்

*(யாழ் மாவட்டத்தை ஏனைய மாவட்டங்களோடு இணைப்பதற்கான ஒரேயொரு பாதை போர் காரணமாக மூடப்பட்டபோது)*

பாதை திறப்போடு
பயணங்கள் தொடர்ந்தன
உறவுகளின் ஒன்றிப்பு
ஊர்க்கோயில் திருவிழா
அடிமனதை நெருடும்
ஆவலுந்தான் பெருகும்

நுங்குக் குலை அறுத்து
பங்கு வைத்துக் குடித்ததுவும்
பனங்கிழங்கும் பனாட்டும்
பங்குவமாய்த் தின்றதுவும்
நினைத்து மனம் இனிக்கும்

கடற்கரைக்குச் சென்று
துடிக்கின்ற மீனுடனே
நண்டோடு இறாலும்
கொண்டு வந்து...

ஒடியல் கூழ் ஆக்கி
பலாவிலையைக் கோலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமெல்லாம் ஆளிருந்து
நிறைவாகக் கூழ்குடித்த
நினைவுகளில் மனம் தோயும்

ஊருக்கு ஒரு சுவையாய்
நாவினிக்கும் பலாப்பழங்கள்
கறுத்தக் கொழும்பானும்
கற்கண்டாய் பல இனமும்
அறுத்துத் தர உண்டதெல்லாம்
அடி நாக்கில் நீரூறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16

## பாதை திறக்காதா?

பாதையடைப்பு
பதட்டத்தில் நெஞ்சம்
நெருடிக் கிடக்கிறது
அரிசியோடு சீனியெல்லாம்
ஆனை விலை பூனை விலை
பரிதவித்து மக்களெல்லாம்
பசியோடு வாடுகிறார்!

பாலருந்தும் பிஞ்சுக்கு
பால்மா வரத்தில்லை
வங்கியில் வைத்த பணம்
பங்குவைத்துத் தருகின்றார்

பாதை திறக்காதா?
பணம் வந்து சேராதா?
மாவோடு சீனியும்
மலையாய் குவியாதா?

ஆவலுடன் பார்த்திருக்கும்
அவரும் மனிதர்தான்
சாவை விரும்பாத
ஏழை எளியவர்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்கும் விழிக்குளத்தில்
கண்ணீர் அலைமோத
கடுஞ்சண்டை தினங்கண்டு
மனம் வெந்து போனவர்தான்!

விமானங்கள் வட்டமிட
வெடியோசை சத்தமிட
நிற்குமோ சமரென்று
நிலைகுலைந்து போனவர்தான்

வீதிகளின் விளிம்பெல்லாம்
அகதிகளாய் இடம்பெயர்ந்து;
பாதியுயிர் பற்று வைத்து
மீதியுயிர் தேடுகின்றார்...!

பாதை திறப்பதற்குப்
பாடுவோர் வரும்வரையும்
ஏழையிவர் உயிர்பிடித்து
எத்தனை நாள் வாழுவரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

## ஓதுவது வேதம்

சில காலங்களாக
எமக்குரியவை அனைத்தும்
செங்குருதியால் எழுதப்பட்டுள்ளன
சந்ததிகள் மட்டும் அழியவில்லை
சரித்திரமும் மாற்றப்பட்டது.

ஈழத்தமிழன்
எழும்பமுடியாத இரும்புத்திரைக்குள்
விலங்கை உடைக்கும் வியூகம் தவறி
பூமிக்கு கீழே புதைக்கப்பட்டான்
சாபமும் ஒரு சரித்திரமானது.

எனது மண் இதுவென்று
புரட்டெழுந்த புழுதியில்
அடியெடுத்து வைப்பதற்கு
அடையாளப் பத்திரம்
அதுவே எம்முயிர்ப் பத்திரம்!

மனமேகங்களில் புகைமூட்டங்கள்
கணநேரமேனும் கலையாது
உரிமைக்குரல் எழுப்பும்
உணர்வுகள் மரத்துப்போய்
ஓதுமொரு வேதந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18

## முதுமை

என் கருவறைக்குள்
உன்னைச்சிறைவைத்து
கனவுகளைச் சொன்னேன்
தலையசைவில் தளிர்த்தேன்
உடல்மொழியால்
உறுதிப்படுத்துவதாய்
தவறாக நினைத்தேன்.

நீ அப்பாவாகும்போது தான்
அம்மாவின் அருமை அறிவாய்
சளியடைத்தால்
சுவாசிக்கச் சிரமப்படுவாய்
மூக்கிலே வாய்வைத்து
உறிஞ்சிச் சீர்படுத்துவேன்
நீ தூங்காத பொழுதெல்லாம்
நான் தூக்கத்தை மறந்தேன்.

ஊட்டச்சத்துத் தாய்ப்பாலில்
உள்ளதென்று
உதிரத்தை ஊட்டினேன்
ஓடித்திரியும் வேளையிலும்
தேடிப்பிடித்துத் திகட்டும்வரை
குடிப்பாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைக்குப் படிப்பாய்
பாதுகாவலாய் பக்கத்திலிருப்பேன்
விளங்காத சமன்பாடுகளை
விளங்கப்படுத்துவாய்
தலையசைத்துச் செவிமடுப்பேன்

உன் உயர்வுக்கான திருப்பங்களில் எல்லாம்
என் அருகிருப்பை அவாவினாய்
திடீர் விபத்தில் சிக்கியவனைப் போல்
காதலுக்குள் விழுந்தாய்
கூடவந்த என்னை
தொழு நோயாளியாக்கித்
தூரத்தே இருத்தினாய்!

பாரமாய் இருப்பேனென்று
பயந்தாயோ?
முதியோர் இல்லத்து
முகவரியைச் சொன்னாய்!
எல்லா வசதிகளும் இருப்பதினால்
இனியேதும் குறையில்லையென்றாய்
உன்னைப் பிரிந்திருப்பதுதான்
எனக்குப் பெருங்குறையெனத்
தெரிந்திருந்தும்
விடாப்பிடியாக விதந்துரைக்கின்றாய்
என் வேண்டுகோளை நிராகரித்தபடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19

## திருவிழா

எழுந்திருப்பு இல்லாத
ஆழ்ந்த உறக்கத்தில்
புரள்கிறது உடல்.
இடையிடையே
திடுக்கிடும் கனவுகளில்
திகைக்கிறது மனம்
சுவாசிப்பும், சொப்பனமும்
ஆசுவாசப் படுத்த
தடயங்கள் அழிந்து
தொடக்கத்தின் தோற்றுவாய்
ஆரம்பமாகையில்
அடிவயிறு கனக்கிறது.

வீதிமரங்களெல்லாம்
வேரோடு குடியிருந்த
காவல் தெய்வங்களைக்
காணவில்லை,
வெள்ளைவான் வரவில்லை,
வெடிப்பேதும் நடக்கவில்லை.

கன்னியாய் இருந்தவளின்
பெண்மை பறித்தெடுக்க
பெரும் யுத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்க்கோயில் கொடியேற
உள்ளமெல்லாம் பூவாசம்
கற்பூரச்சட்டி, காவடியெடுப்பு
அடியளிப்பு, அன்னதானம்
அனைத்தும்தான்...

நல்லூர்த் திருவிழா!
தோய்ந்து முழுகி
சொட்டுகின்ற நீரோடு
கந்தா! சுகந்தாவென,
கடுகி நடப்போரை
சுற்றி வளைப்புச் சூழ்ந்தது

நில்! 'காட்' என்றார்
மேலெல்லாம் மீட்டிவிட்டு
செல் என்றார்
பொல்லாத கோபத்தில்
போகிறார் பக்தர்.

வாசல் படி தடக்க
அட்டாங்கமாக அமர்ந்தார்
'பொம்ப'ரும் 'புக்காரா'வும்
சுத்தியபோது நாம்
சுத்தித்தான் வந்தோம்

அரோகரா என்றபடி
அங்கமெல்லாம் உதறியபின்
உள்ளே நுழைந்தார்
துவார பாலகராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிமரத்தின் இரு புறமும்
இராணுவக் காவல்.

பக்தி வரவில்லை
தேவாரப் பாட்டில்லை!
கத்தி அழுவதற்கு
கண்ணீரைக் காணவில்லை!
நித்திரையில் மட்டுமே
நிம்மதியைத் தேடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20

## மழை

ஈரலிப்பற்ற வெறுந்தரையில்
தூறிச்செல்லும் தூற்றலாய்
எப்போதாவது வருடிச் செல்கிறாய்
வள்ளலைப் போல.
உரத்த பெருமழையில்
இறுக்கம் இழந்து
சேறாகிப் போகவும்
உன் வரவுக்கான
தடயங்களைச் சுமக்கவும்
ஏங்கிக் கிடக்கிறேன்!

உனக்கு மட்டுந்தான்
ஏமாற்றத் தெரியுமா?
சல்லாபம் செய்பவனாய்
சன்னதம் கொண்டு
முழங்குவாய்! மின்னுவாய்!
ஆலிங்கனத்துக்கான
ஆயத்தமென்று
மனது ஆர்ப்பரிக்கும்
வந்தசுவடே தெரியாமல்
மறைந்து விடுகிறாய்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ நினைத்தால் மட்டுமே
என்னை நிறைக்கிறாய்
ஊற்றுக்கால்களை
ஊறவைக்கிறாய்
இன்பவெள்ளமாய்
மிதக்கிறாய்!

எனக்கும் உனக்குமான
அத்துவிதக் கலப்பின்
அடையாளப்படுத்தலின்
தத்துவத்தை அறியாமல்
மழை என்கிறது
உலகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21

## சுயம்வரத் தாலி

மூலபாடத்தை வன்புணர்வு செய்து
பிரதி பேதங்களோடு ஒப்புவிக்கும்
வேற்றுமொழிக் காரனையும்
ஈரக்கசிவில் தோள்தோய்க்கும்
ஏற்றுக்கொள்ளலை நிராகரித்தபடி
ஆண் கழுத்தில் அணிவித்த தாலியில்
தொன்மம் சுயமிழக்கிறது

தெருக்கதவுகளை அறைகிறது காற்று!
செவிப்பறையில் வன்மக்குரல்கள்
உன்மத்தமாக ஒலிக்கிறது.
வசந்தத்தின் வரவுக்குத்
தடையுத்தரவு செய்து,
இலையுதிர் காலத்தை
பிரசவிக்கும்
வலிநிறைந்த ஓலங்களால்
நிரம்பி வழிகிறது
இயற்கைவெளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22

## இசைதல்

எரியும் தணல் வெளியில்
நீந்திக் குளிக்கிறது மனம்
காவியுடை தரித்த துறவியாய்
ஞானம் பரப்ப முயல்கிறது உடல்
மனமும் உடலும் இசைந்து போவதாய்
இதுவரை எந்த ஒப்பந்தத்திலும்
கைச்சாத்திடவில்லை
ஆணாதிக்க வெறியோடு
ஆட்டிப்படைக்கும் மனதை
தெருப்பிச்சைக்காரனாய்
ஒட்டிக்கொள்கிறது உடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23

## 'ஏ'க்கா ஏக்கம்

மார்கழி மாதம் மரமும் நடுங்கும்
போர்வைக்குள் புதையும் உடல்
இமைக் கதவுகள் இறுகமூடிக்கொள்ள,
இன்பக் கனவுகள் துரத்தும்
அவன் பெயர் ஹக்கீம்.

ஆசைக் கோட்டைக்குள் அகப்பட்டு
தூரதேசத்து வாசியாய்
தொலைந்து விட்டான்
கடந்தவருடம்
கடுமையாய் படித்தான்
விடாமல்பெய்யும் மழையாய்
வினாக்கள் தொடுத்தான்
எனக்கு 'ஏ'
எடுத்துத் தருவான்
இவன் என்று
கனவு காணத்தொடங்கினேன்!

என்ன நடந்தது இவனுக்கு?
என் கனவுக்கோட்டைக்குள்
கன்னம் வைத்தது யார்?
பாட்டும் பொருளும் சொன்னால்
என்னைப் பார்த்து முறைக்கிறான்
ஏக்கம் பிடித்தது எனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற்கூடு கதிரையிலே
உணர்வற்றுக் கிடக்கும்
உயிர் எங்கோ உறவாடி
சுகம் கண்டு மிதக்கும்
அதனால் தான் படிப்பேதும்
ஏறவில்லை அவனுக்கு!

அடுக்கடுக்காய் கேள்விகளை
அனுப்பவில்லை எனக்கு
முடிவாக விடை கண்டேன்!
முழுப்பொருளும் தொலைத்த
வழிப்போக்கன் ஆனேன்
இடைக்கிடையே பார்க்கிறேன்
தனிமையிலே இருக்கிறான்,
தனக்குள்ளே சிரிக்கின்றான்.

'மொபைல்'லை அழுத்திவிட்டு
முகத்தருகே வைக்கின்றான்
என்னவென்று கண்டுகொண்டேன்
இதற்குப் பெயர் காதல்தான்,
'டீன்ஏஜ்' பொடியன் தான்.

வீண்பேச்சில் பயனில்லை
விழிதெரியா குருடனுக்கும்,
வழிகாட்ட விளங்கிடுவான்
காதலுக்குள் விழுந்தவனை
கரைசேர்க்க முடியாது
தெளியட்டும் என்று நான்
தேறிவிட்டேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பென்ன இவனுக்கு?
பாகற்காய் போலாகும்!
கனவுக்குள் வாழட்டும்,
காதலிலே மூழ்கட்டும்,
சலிப்போடு பார்க்கின்றேன்
சல்மானும் அஸ்மீரும்
இருக்கின்றோம் நாங்கள்
எடுப்போமே 'ஏ' என்றார்
'ஏ'க்கான ஏக்கம் ஏகியது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24

## புலமைப்பரிசில் பரீட்சை

புலமைப்பரிசில் பரீட்சை வரும்
பலருக்குப் பணம் கிடைக்கும்
சிலருக்குப் புகழ் பெருக்கும்
கொலுவைத்த பொம்மை நாம்
உடல் களைக்க உற்சாகமுட்டி,
மனம் சலிக்க மகிழ்வித்து,
பள்ளி விட்டும் பயிற்றுவிக்கும்
வள்ளல்களே வளமான ஆசிரியர்!
வீடு செல்ல மறந்திருந்தார்
சூடாகச் சோறருந்தும் சுவையிழந்தார்
கொண்டாட்டம் விரும்பவில்லை,
கோயில்குளம் நாடவில்லை,
அம்மாவாய் அன்பு தந்து,
அப்பாவாய் அறிவு கொட்டி
சுற்றம் எல்லாம் போலிருந்து
சுற்றி எம்மை வந்தீரே!
அழியாப் புகழைப் பெறுவதற்கு
மெழுகாய் உருகி ஒளிதந்தீர்!
வாழும் காலம் உள்ளவரை
வாழ்வில் உம்மை மறவோமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25

## மூச்சுக் காற்றின் முணுமுணுப்பு

*(யாழ்ப்பாணத் தரைவழிப்பாதை பூட்டப்பட்டு
கப்பல் பயணம் நடைபெற்றபோது)*

**வா**னப் பறவைகள்
வட்டமிட்டுப் போட்ட
குண்டு முட்டைகள் குவிய
இடப்பெயர்வும், இழப்புகளும்
பட்டறிவை பறைசாற்ற
வெட்டியெறிந்த புழுக்களாய்
தொடுப்பற்றுப்போனது வாழ்க்கை!

ஐயிரண்டு வருடங்கள்
செய்த பெரும் தவமாய்
மௌனித்திருந்த மனதில்
பிறந்த மண்ணின் பித்துப்பிடிக்க
பிரம்ம முகூர்த்ததில்
காலைக் கடனும் கழிக்காமல்
கப்பல் பதிவிற்கு கடுகினேன்
தூக்கம் கலையாது.
தோளில் தலை சாய்த்த
நீண்ட நெடும் வரிசை
தெத்திப் பல்போல திக்கெல்லாம்
பெரும் வரிசை
கம்பிக்குள் பாய்ந்து வந்து
முந்திவரச் சென்றவர்மேல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்பட்டுக் கொண்டோர்
தள்ளி விழுத்தினர்
திருவாய் மலர்ந்தவர்முன்
கணநேர மரணம்
பல்லுவாய் தேய்க்காது,
பசி வயிற்றைக் கிள்ள,
மெல்ல நகரும் வரிசை!

பதிவுத் துண்டெடுக்கு மட்டும்
படும்பாடும் கொஞ்சமல்ல
தனிநாடு கண்டுவிடத் தரிப்பரோ?
என்று மனம் எண்ணியது
வரிசையாய் வாவென்றார்
அருகருகே பல வரிசை
அடுக்கடுக்காய் தோன்றி விட
பதியவந்தோர் படும்பாட்டால்
பதிவிப்போர் அவதியுற்றார்
இருக்காதா?

துன்பம் இருவருக்கும் தான்
கப்பலுக்குக் காத்திருந்து
காசு பணம் கரைந்திடுச்சு!
காலும் அலுத்திடுச்சு!
வீட்டில் உள்ளோர் விசாரிப்பால்
வெறுப்பும் வளர்ந்திடுச்சு!

நெடுந் தவத்தின்பேறாய்
பதிவெடுத்து
சிற்றிஔவ் றிங்கோவை
சென்றடையப் படும்பாடு
தாளம்படுமோ தறிபடுமோ
நாம்படுவோம் நன்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை குறையாமல்
பொறுமையுடன் காத்திருக்க
புறப்படும் கப்பல்
கப்பலுக்குள் இருந்துவிட்டால்...
கண்ணும் மனமும் களிப்புறும்
தொலைக்காட்சி மட்டுமல்ல,
குளிரூட்டி வசதி கொண்டு,
சுடச்சுடவே நெஸ்கோப்பி
சும்மா தரமாட்டார்
இருபது ரூபாவை இழக்கவரும்
குடித்தவுடன் சுறுசுறுப்பைக்
கூட்டியே வந்துவிடும்.
இரவு பத்து மணி
இருக்கைகள் களைப்பாற,
காத்தவராயன் கூத்திருந்து
பார்த்தவர் போல்
கல்லு வண்டி கொட்டுகின்ற
கடுமையுடன் குறட்டை
மெல்லத் தரையில் மேனி கிடத்தி
நல்லுறக்கம் கொள்வார்.

காங்கேயன் துறைக்கரைக்கு
அதிகாலை கப்பல் வரும்
கடற்படைகள் வந்து நின்று
கட்டளைகள் பிறப்பிப்பார்
பயணப் பொதிகள் பக்குவமாய்
முதல் இறங்கும்
பயணிகள்...
தள்ளி நெருக்கி
தவிக்கும் குழந்தை தவிடாகி
பாதி உயிரும்,
பயணத்தில் போகவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையுயிராய் கூடுகளாய்
ஆவி தரித்திருப்பார்!

வசு வண்டி வந்து நிற்கும்
ஆளுக்கும் பொதிக்கும்
பேசிப் பணம் பறிக்கும்
மந்தைகளாய் மக்களை
வண்டியின் வயிற்றுக்குள்
நல்லடக்கம் செய்வார்
முதுகோடு முன்பகுதி
அத்துவிதமாகும்
யாருற்றார்? யாரயலார்?
யாதுமறியோமாய்...
வீடொன்றே விருப்புற்று
வெறும் பயணம் தொடரும்...!

யாழின் வளம்பெருக்கும்
தென்னை மரங்கள்,
தித்திக்கும் மாமரங்கள்,
பூத்துக் குலுங்கும் பூமரங்கள்,
செம்மண் வயற்பரப்பில்
பசுமை கொழிக்கின்ற
நெற்பயிர்கள்!

விண்ணளக்கும் கோபுரங்கள்,
விருந்து தரும் நாற்சார் வீடுகள்,
கலை பயிற்றும் பள்ளிகள்
சொல்லவல்ல எழில்தந்து
புகழ் சேர்க்கும் பனை மரங்கள்

இவை மட்டுமல்ல
வெங்காயப் பாத்திக்குள்
நட்டு வைத்த பொம்மைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமும் மனிதரென
தட்டி உரைப்பது போல
தலைநிமிர்த்தி நிற்கும் நிலையும்
தனியான அழகுதான்...!

ஓடுகின்ற பஸ்சிலே,
ஒன்றையுமே காணவில்லை!
காடுபத்தி கிடக்கும் என்தேசம்
கலையிழந்து.

கண்ணாடி மேல் இருக்கும்
கருந்திரையை விலக்குகையில்;
வேள்விக் கிடாயின் வெட்டுண்ட
தலைபோல்!
பனை மரங்களைப்
பார்க்கச் சகிக்கவில்லை
தேச விடுதலைக்காய்
பற்றியெரிந்த தேசத்தில்
பறிக்கப்பட்டவை
மனித உயிர்கள்
புனிதப் பொருள்கள்
மண்ணின் வளங்கள்
எண்ணில் அடங்காத
இழப்புக்களில்
மரங்கள் கூட
சிரங்களைத் தந்தன.
மூச்சுக் காற்று
மெதுவாய் முணுமுணுக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 26

# வக்கிரப் பூக்கள்

தொன்மக் கயிறு கிழித்து
தொடுத்த மாலையில்
வக்கிரப் பூக்கள்
வாசம் வீசின...!

எங்கள் தோட்டத்தில்
மல்லிகையும், முல்லையும்
குருதியில் குளித்ததால்
செம்பருத்தியாகின.

சில்லறைக் காசுகளாய்
சிதறியது வாழ்க்கை
உறவுக் கயிறு அறுபட
அந்நியமானது மனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27

## படைப்பு

மனிதா!
எனக்கு நீ ஒரு விளையாட்டுப் பொம்மை...
என் சூத்திரக் கயிறு
உயிர்ப்பிக்க இயங்குவாய்
செயலற்றுப் போனால்
செத்த பிணம்!

ஆடிய ஆட்டமும்,
ஓடிய ஓட்டமும்,
அடங்கும் போது நீ
நடைப்பிணம்!

உனக்குச் சொந்தமானது
ஆறடி மண் மட்டும்தான்.
அதற்குள் அடங்கும்போது
பிடி சாம்பல்!

எனக்குச் சிரிப்பு வரும்
உனக்குத் தெரியாது
ஆறடி நிலத்தில்
நித்திய மௌனித்தலுக்குள்
அடக்கம் செய்த
உன் பிடி சாம்பலை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புழுவும் பூச்சியும் ஆட்சிப்படுத்தும்
தேடிப் பார் அர்த்தப்பாட்டை!
தெரிந்து கொள்வாய்
பிறப்பின் மர்மத்தை!

ஒவ்வொரு பிறப்பும்
மகத்தானவை
உனக்காகத்தான்
உன்னைப் படைத்தேன்

செதுக்கச் செதுக்க
சிற்பம் சிறக்கும்
துன்பமும் கவலையும்
சுட்டுப் போடச்
நீ சுடரும் பொன்னாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28

## திறவுகோல்

எங்கள் மனஇராச்சியத்தின்
இளவரசர்களே!
பட்டாபிஷேகம் செய்வதற்கு
முகூர்த்தம் பார்க்கின்றோம்!

உங்கள் மனக் கதவுகளில்
மாட்டப்பட்ட பூட்டுக்களை
மெல்லத் திறக்க வைக்கும்
திறவுகோல் எங்கள் கைகளிலே!

நாங்கள் சர்வாதிகாரிகளல்ல
ஜனநாயகத் தூண்கள்!
மகுடம் சூட்டிப்பார்க்க
செங்கோலைச் சுமப்பவர்கள்!

விடைத்தாள் திருத்தியதால்
விறைத்துப்போன கரங்களுடன்
வகுப்பறைக்கு வரும்போது
குறைந்த புள்ளிக்குக்
குறிப்பிடுவீர்கள்!

இலஞ்சக் காற்றில்
மிஞ்சியவர்கள்
நாங்கள் மட்டுந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29

## வாழ்க்கை

இளமை இருக்கிறது
இன்னமும் அனுபவிக்க...
ஆதலினால் அன்னை
விதவைக் கோலத்தை
விரும்பவில்லை!

மீண்டும் விலைப்பட்டாள்...
பருவமகள் நான்
பதமாய் இருப்பதால்
புதுசுக்காய் ஒரு போராட்டம்
சிறியதந்தைக்கு

தலைவருத்தம் எனக்கு
தடவிவிடு! என்பான்
உள்ளாடை தந்தென்னை
உலர வைக்கச் சொல்வான்

கள்ளிநீ கட்டழகியென்றே
சிற்றிடையில்
சின்னதாய் கிள்ளுவான்!
அப்பாவை வெறுத்தால்
அம்மா முறைப்பாள்
சும்மாயிருவென்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நள்ளிரவு
மெல்ல ஓருருவம்
கள்ளனைப் போல் வந்து
கட்டியணைத்தது
எட்டி உதைகொடுத்து
ஏகினேன் நட்டநடு இரவில்

மாமி அருகிற்கு
மச்சான் மனமிரங்கி
கட்டினான் தாலி
வயிற்றிலொன்று,
கையிலொன்று,

அடுக்கடுக்காய் வாரிசு.
சலிப்பற்ற உழைப்பாளி
என் கணவன்
வீடுவரக் காணவில்லை!
விரைந்தேன்
வேலிஓரத்து வெறுந்தரையில்
சூடுபட்டுக் கிடக்க,
துடிதுடித்தேன்
அடுத்தகட்டம் தெரியாது
அலைமோதும் மனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30

## காதல் புத்தகம்

அன்பே!
எனது வாழ்க்கைப் புத்தகத்தில்
இன்ப உணர்வுகளால் எழுதப்பட்ட
முகவுரை நீ!
இனிய கனவுகளால் பொறிக்கப்பட்ட
அணிந்துரை
காத்திரமான எதிர்பார்ப்புகளாலாகிய
பொருளடக்கம்
கனதியான அர்த்தங்கள் அடங்கிய
அத்தியாயங்கள்
மறு ஜென்மத்திலும் இணைவோம்
இதுவே முடிவுரை
யாராலும் திறனாய முடியாதது
எமது காதலின் மதிப்பீட்டுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31

## புகலிடப் பரீட்சை

*(இராமேஸ்வரத்தில் அகதிகளாய் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு மண்டப முகாமில் கற்பிக்கச் சென்றபோது)*

யுத்தக் கரங்களை விலக்கி
அயல் நாட்டிலே
அகதிகளாய் தஞ்சம்
மனமிரங்கியோர்
மறுவாழ்வுக் கழகத்துடன்
இலங்கை இந்திய
அரசுகள் இணைந்து
இறுதிப் பரீட்சை வைக்க
இசைந்தன

பயிற்றுவிக்க ஆசிரியர்
பயணித்தார்
இரு மாத காலத்தில்
இழந்த கல்வி ஈடு செய்து
விளக்கம் கொடுப்பதற்கு
விரும்பியோர் வருகவென்ன...
பணிக்காக அர்ப்பணித்து
பெயர்கொடுத்தோர் அறுவர்
போய்ச் சேரும்வரையும்
பேரிடரும் கொண்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டுத் தூதரக
வெளிவாயில் செல்கையிலே,
உளவாளி போல வந்து
கணையாலே துளைத்தார்

ஊரென்ன? பெயரென்ன?
ஏன் இங்கு வந்ததென?
பயத்தோடு பின்தொடர்ந்தார்
வெடிப்போமென வெலவெலத்தார்

பார்த்ததுமே பயம் கொண்டு
வேர்த்து விறுவிறுத்தார்
சொந்த மண்ணென்று
சொல்ல முடியவில்லை!

மொழியும் புரியவில்லை...
முகத்திலே கருணையில்லை!
வேற்றுக்கிரக வாசியாய்
வெறுப்போடு பார்த்தார்!

தமிழ் நாட்டில் கால்வைத்து
தாய் மண்ணாய் அணைக்க
சுதந்திரத்தின் சுவாசிப்பை
விரும்பி வியந்தோம்

வான் உயர்ந்த கோபுரங்கள்
வழியெல்லாம் பூச்சரங்கள்
நெற்றி நிறைந்த திலகத்தில்
நிமிர்வு கண்டு மகிழ்ந்தோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் பதவி உள்ளோரை
உறவோடு காண வந்தோம்
அழகு தமிழாலே பழகினார்
அமைதி கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32

## ஏதிலியர் கழகம்

ஈழத்து ஏதிலியர் கழகம்
இடம்பெயர்ந்தோர்,
வாழ்விழந்தோர்,
கல்வியற்றோர்,
அனைவரையும்
ஆதரித்து
அகமகிழ்ந்து
பணிசெய்யும
மண்டபத்து வாழ்வை
மனம்விரும்பி
அணியணியாய்
வந்திறங்கும்
அகதிகள்
சாய்ந்திருக்க
நிழல்பரப்பும்
ஆலமரமாய்
அரவணைக்கும
சேவையே பெரிதென்று
ஊதியம் பாராது
உறுதுயரகற்றி
இடரொடு வாழும்
இனத்தினைக் காக்க
இமயமாய்
இருகரம் நீட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகத்தின் கருணை
கருத்திலே நிறையும்,
இருளது போக்கும்,
ஒளிதரும் மதியாய்
தமிழின விடிவுக்காய்
தம்முள்ளே இணைந்து
வாழிட வசதிதந்து
வரந்தரும் தெய்வமாக
நாடியே நன்மைசெய்யும்
நற்பணி வாழ்த்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33

## உறவும் நட்பும்

உன் முகவரியை சொல்
தென்றலாய் வந்து
வருடிச் செல்கிறேன்
என்கிறது நட்பு!

போகும் வழியில் காற்றாய்
தழுவிச் செல்லென
கட்டளையிடுகிறது உறவு!

நட்பா? உறவா? உயர்வெனும்
தேடுதலோடு
நகர்கிறது காலம்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34

## கவிதை

மொத்தக் காதலையும்
ஒற்றை விழிக்கசிவில்
உணர்த்திய காதலியாய்
உன் கவிதை
ஏற்படுத்திய பாய்ச்சல்.
பனிமூட்டத்தின் முன்
எழும் சூரியக்கதிராய்
மானிடத்தின் மர்ம
முடிச்சுக்களை
மறுவிசாரணை
செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35

## தமிழின் உறவு

கனவுப் பூக்களால் மாலைகட்டி
கற்பனைச் சிறகால் வானமளந்து
பிரசவித்த குழந்தைக்கு
முதல் எழுத்துக்களை
முற்றத்து மணலிலே
விரல் பிடித்து எழுதி
அகரத்தின் ஒலிப்போடு
உச்சரிக்கப் பழக்கிய
தமிழ் உணர்வுக்குத்
தாய் ஒரு பாலம்.

௵௵௵




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36

## பர்தா அணிந்த பாவை!

அழகும் குணமும் அமைந்திடப் பெற்று
அறிவுடன் திகழ்பவளாம்.
வதனம் பொலியப் புன்னகைசிந்தி
மகிழ்வைத் தருபவளாம்.
குலவும் குயிலின் குரலின் இனிமை
குழைத்து மொழிபவளாம்.
நிலவின் சாயல் மனதை மயக்க
நெஞ்சம் நிறைந்தவளாம்.

அடக்கம் பொறுமைஅவளில் கண்டே
அகிலம் வியந்திடுமாம்.
அன்பைப் பொழிய
தாய்மை தவித்திடுமாம்.
ஆண்கள் பள்ளியில் ஆங்கிலம் பயிற்றி
அறிவைப் பெருக்கிடுவாள்.
அழகின் சிகரம் அனிஷா என்னும்
கனவுக் கன்னிகையாம்

பூவிதழ்க் கன்னம் பூரித்துச் சிவக்க
புன்னகை சிந்திடவே!
நூலிழை இடையில் மன்மத பாணம்
போரது புரிந்திடவே!
வண்ணச் சேலை வகை வகையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணை மயக்கிடவே!
கன்னிஅனீஷா கல்விக் கூடம்
காலையில் வருவாளே!

பாடம் கேட்கும் பக்குவம் இழந்த
மாணவர் மத்தியிலே,
தேரும் அறிவில் சிறப்புப் பெற்றிட
ஆர்வம் காட்டிடுவாள்!
அலையும் மனதை அடக்கத் தெரியா
சீடன் அஸ்மீரே...
சிலையே கலையே சிந்தை மயக்கும்
நினைவே உனதென்றான்.

புதுமலர் எழிலாய் தினம்வரும் நிலவாய்
மனமதை மயக்குகின்றீர்!
உளமது இழந்து மதிமுகம் கண்டிட
கனவது காணுகிறேன்.
சரியோ தவறோ அறியாப் பருவம்
சம்மதம் வேண்டுகிறேன்.
நிறைவாய் ஒரு மொழி தருவீரென்று
நின்னடி போற்றுகிறேன்.

மான்விழிக் கண்கள் மதுரசக் கன்னம்
வாழ்வில் கிடையாதோ?
ஆழ்கடல் நீயோ? அதிரசம் தானோ?
அயர்ந்தேன் அழகாலே.
பாழ்வழி நடந்து வாழ்வை அழித்து
பாவம் சுமக்காது,
வாள்விழி மாதே! வழியது சொன்னால்
வாழ்வேன் பலநாளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையினை மறந்து, நேர்வழி துறந்து,
அவலம் அடைவதுவோ?
மனிதம் இழந்து, மாண்பும் அழிந்திட,
அழகும் தடைதானோ?
சைத்தான் புகுந்து, சலனம் அடைந்திட,
வைத்தவள் நான்தானோ?
சொத்தாய் மதிக்கும்அழகை மறைத்திட
பர்தா அணிவேனே!

வேல்விழி மாதில் விருப்புக் கொள்வது
விந்தை இதுவல்ல!
கல்வியில் சிறந்து பல்கலை பயின்று
நல்வழி சென்றிடவே,
பாவையர் பலரும் சீருடன் விரும்பி
சிறப்புடன் வந்திடவே,
காலம் கனியும் கருத்தைச் செலுத்து
உன்வாழ்வு வளமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37

## மரணத்தின் வலி

உடன்பிறப்பே!
என் உதிரம் துடிக்குதடி!
உள்ளம் தவிக்குதடி,
உண்ணை எடுத்தால்
உன்முகம் தான் தெரியுதடி!
உறஙக நினைத்தால்
உன்குரல் ஒலிக்குதடி!

தொலைபேசி அடிக்கையிலே
நான் எங்கோ தொலைகின்றேன்
எண்களெல்லாம் அழுத்திவிட்டேன்
எதிலுமே தொடர்பு கிடைக்கவில்லை
ஏங்கி அழுகின்றேன்!

என்னருகே நீயிருந்தால்
உன்னுயிரைக் காப்பதற்கு
என்னுயிரைத் தந்திருப்பேன்
என்னாலே நம்ப முடியவில்லை
நீ உயிரோடில்லையென்று!

உறவுகள் இங்கிருக்க
ஓடி ஒளித்ததெங்கே?
குலவிளக்கே, ஒளிகொடுத்தாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளையும் ஏன் வரவிட்டாய்?
மதியிழந்த வானமாய்
துயர் நிறைந்து
வாடுகின்றோம்!

வழிகாட்டி போலிருந்தாய்
நடுக்காட்டில் நிறுத்திவிட்டாய்
துடுப்பில்லாப் படகுகளாய்
நடுக்கடலில் தவிக்கவிட்டு
எங்கே நீ சென்றாயோ?

என்ன பிழை செய்தோமோ?
வாழ்க்கை வெறுத்ததுவோ
வாழவழி தெரியலையோ?

தோளிலே தூக்கி வைத்த
தோளிரண்டும் வாடுதடி!
நெஞ்சோடணைத்திருந்த
கையிரண்டும் சோருதடி!

தேடக் கிடைக்காத
பெரு நிதியே!
தேடித்தேடி அழுகின்றோம்
செவியிரண்டும் கேட்கலையோ?

கனவிலே வருகின்றாய்!
கதைகதையாய் சொல்லுகிறாய்!
கனநேரம் பேசுகின்றாய்!
கொலுவிலுள்ள பொம்மையாய்!
கலகலப்பாய் சிரிக்கின்றாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுகளைச் சுட்டெரித்து
நீயெங்கே சென்றாயோ?
உன்னருகே வரும்வரைக்கும்
கண்ணிரண்டும் தூங்காது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 38

## பொழுதும் புலராதோ?

*(1998 திருகோணமலை பிரதேச சாகித்திய விழா போட்டியில் முதல் பரிசு பெற்ற கவிதை)*

கோலக் குயிலும் சோலைக்கிளியும்
சுதிகூட்டிக் கொடுத்திடவே
யாழின் நரம்பில் மேவும் சுரங்கள்
இசை பேசிக் களித்திடவே
மாலை நிலவில் வீசிடுந் தென்றல்
தமிழ் வாசஞ் சுமந்திடவே
வாலைக் குமரியின் நாணச் சிரிப்பாய்
தமிழ் வாழ்ந்து மகிழ்ந்தாளே!

திரைகடலோடி பெரும் புகழ் தேடி
உறவுகள் படைத்தோமே!
உரிமைகளோடு உணர்வுகள் சிறக்க
தலைமையும் வகித்தோமே!
கருமுகில் சூழ்ந்த ஒளி நிலவாக
கவலையில் கலந்தோமே!
நெருப்பினில் விழுந்த மெழுகதுபோல
நிலை மாறித் தவித்தோமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்துவம் ஓங்கக் காவியம் போற்ற
சமத்துவம் கண்டோமே!
வித்தகம் வளர்த்து விந்தைகள் செய்து
விருதுகள் பெற்றோமே!
சத்திரம் தேடி சாவினுக்கோடி பெரும்
சலனம் கொண்டோமே!
நித்தமும் சாகும் நிலமையும் கொண்டு
தத்துவம் புரிந்தோமே!

கொடியில் பூத்த கொத்து மலராய்
கூடிக் கிடந்தோமே!
கூத்தும் பாட்டும் சிந்தை நிறைய
யாத்து மகிழ்ந்தோமே!
வித்தாய் வளர்ந்த சொத்துகள் யாவும்
வீணாய் போனதுவோ?
சித்தம் கலங்கி சிந்தை தளர்ந்து
பித்தாய் மாறுவதோ?

பெற்றவர் எங்கோ சுற்றமும் எங்கோ
பற்றது விட்டோமே!
வேரதுவோடி விழுதுகள் தாங்கிய
உறவுகள் இழந்தோமே!
சாவிலும் கூட சேர்ந்திட முடியா
சரித்திரம் படைத்தோமே!
பாவினில் நூலாய் பாவிகள் நாமாய்
நோய்பல கொண்டோமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிப் பெயரால் வேள்விகள் செய்து
சண்டைகள் பிடித்தோமே!
மோதுமலையில் முட்டிய மூச்சாய்
வேதனை வளர்த்தோமே!
வாளதுபற்றிய வஞ்சகன் போலே
கொலை பல செய்தோமே!
பாழது போவது பாவிகள் நாம் என
படித்திட மறந்தோமே!

விழுமியம் கூறிடும் அழகிய காவியம்
விடுகதையாக நினைத்தோமே!
பழியைச் சுமந்து பாவம் புரிந்து
அழிவை வளர்த்தோமே!
நோயைக் காவும் ஈக்களைப் போல
வாயைப் பிளந்தோமே!
தாயைப்போன்ற தமிழின் வளம்
பேசிட மறந்தோமே!

கடமையைக் கண்ணாய் கருதிட மறந்து
உடமையைப் பிரிந்தோமே!
அடிமையின் தளையை உரிமையைப் போல
கருதியே களித்தோமே!
அறிவினில் ஊறிய திறமைகள் யாவும்
பறிமுதல் போயினவோ?
சிறுமதியாலே பெருமதி குறைந்து கொடும்
சிறையினில் வாடுவதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருநிதி தேடி வரும் வழியோரம்
வழிப்பறி ஆனதுவோ?
பெருமையில் நிலைத்த தமிழினம் இன்று
இழிநிலை போனதுவோ?
தனித்துவம் முழுதும் தவிடாய்ப் போனபின்
தமிழர் நாமாமோ?
இனித்துயர் யாவும் இதுவே என்றால்
ஏன் தான் வாழுவதோ?

இமயம் தொட்ட தமிழின் புகழ்இனி
இறந்து பட்டிடுமோ!
பனையின் குலையாய் விழுந்து தெறித்த
உறவும் இணைந்திடுமோ...?
தாயின் விலங்கை தகர்த்து விலக்க
தனயன் பிறப்பானோ!
தமிழர் நாமென தட்டி உரைத்திட
பொழுதும் புலராதோ...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39

## ஏழ்மை

வறுமைத் தீயில் வாடுகின்றோம்
வாழ்வில் குளிரைத் தேடுகிறோம்
விடிவைக் காண ஏங்குகின்றோம்
வெளிச்சம் என்பது பூச்சியமா?
ஏழ்மை ஒன்றே தோழமையோ?

மாளிகை வாழ்வும் பகற்கனவோ?
மாற்றான் உயர அடிக்கல்லாய்
மாடாய் நாளும் உழைப்பதுவோ?
ஏணிப்படிகள் கீழேதான்
ஏறும் மனிதன் காலடிகள்.

இதயத் தசையில் மிதிக்கையிலே,
ஏழை நாளும் நசிகின்றான்
தூக்கி விடவும் யாருமில்லை,
துயரம் நீங்க வழியில்லை!

ஏரில் பூட்டிய மாடாக,
இயங்கும் போதே சோறுண்டு
மெழுகாய் உருகி ஒளிதருவான்
மேன்மை தரவே தோள் கொடுப்பான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தில் மிதக்கும் மனிதனின்
பாவம் தானே சுமந்திடுவான்
குற்றம் புரிந்தவன் பணத்தாலே
கொஞ்சிக் குலவி வாழ்ந்திடவே,
ஏழ்மை வாழ்வைப் பலியாக்கி
பாழும் சிறையில் தள்ளிடுவான்

பணமும் புகழும் இருந்தாலே
பாரில் எதையும் வென்றிடலாம்
வறுமை மட்டும் வேண்டாமே!
வெறுமை துரத்தும் வாழ்வினிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40

## அகால மரணம்

பிரியமானவளே! உன்னோடு
சேரவோ? பிரியவோ?
தெரியவில்லை
வரமாகத்தான் வந்தாய்,
நான் சாபமாகினேன்!

வேலையென்று
மேலதிகாரியுடன் நீ
பயணிக்கிறாய்.
வாகனச் சாரதியாய்
வந்துவிட்டுப் போக
மனது வலிக்கிறது.

சபிக்கப்பட்ட கல்லாக்க
சலனம் எழுகிறது
சோரம் போனதாகச் சுட்டும்
எதிர்ப்புக் குரல்களை
நிராகரிக்க முடியவில்லை!

தீக்குளிக்கச் சொல்வதற்கு
நீ சீதையல்ல
ஊர்வாயை மூடவைக்க
நான் இராமனல்ல!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை ஆற்றுப்படுத்துவதில்
தோற்றுப்போனவன்
நச்சுப் பாம்புகள் தொங்கும்
மரக்கிளைகள்
விஷக்காற்றைக்
கக்கும்.
அசுத்தக் காற்றைச் சுவாசித்தபடி
சுருக்கிட்டுக்கொள்கிறேன்
அகாலமரணம் என்று
அறிவித்தல் நாளை வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்புகளுக்காக:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகளுக்காக:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## இந்நூலாசிரியரைப்பற்றி...

ராணி சீதரன்

ஈழத்து இலக்கிய உலகில் தமிழ் பெண் எழுத்தாளர்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒருவராக ராணி சீதரன் விளங்குகின்றார். இவர் கல்விபுலத்தில் ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்து சிறந்த மாணவர்களை உருவாக்கியுள்ளார். ஆசிரிய ஆலோசகராகவும், தேசிய கல்வி நிறுவகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் கடமையாற்றிய காலங்களில் தமிழ் ஆசிரியர்கள் தமது வகுப்பறைக் கற்பித்தலை மேம்படுத்துவதற்கு சிறந்த வழிகாட்டியாக இருந்துள்ளார். மாணவர்கள், பணிபுரியும் பெண்கள் போன்றோர் மன அழுத்தங்களிலிருந்து விடபடுவதற்கு நல்லதொரு உளவளத்துணையாளராக சேவையாற்றியுள்ளார். இத்தகைய சேவைகளினூடாக அவர் பெற்ற அனுபவங்கள் எழுத்துலகில் நல்லதொரு படைப்பாளியாக அவரை மாற்றியுள்ளது.

சிறுகதைகள், கவிதைகள், இலக்கியக் கட்டுரைகள், உளவியல் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள், சிறுவர் பாடல் என பல்வேறுபட்ட நிலைகளில் இவர் படைப்புகள் வெளிவந்துள்ளன. சிறந்த படைப்பாளியாக மட்டுமல்ல இலக்கியப் படைப்புகளை திற னாய்வு செய்வதில் வல்லவராக இருப்பதைக் கண்டு அவரைப் பாராட்டியிருக்கின்றேன்,

மூச்சுக்காற்றின் முணுமுணுப்பு என்ற இந்த கவிதைத் தொகுப்பில் இன உணர்வும் அது சார்ந்த யுத்த வடுக்களும், சமூக நோக்கும் கலந்த உணர்ச்சி வெளிப்பாடுகள் கவிதைகளாக வடிவம் பெற்றுள்ளன. இவை கற்பனையோ, புனைவோ இல்லை, அத்தனையும் அனுபவித்தவை. இவை படிப்பவர் மனதில் சில பதிவுகளை ஏற்படுத்தும் என நம்புகிறேன்.

**பத்மா சோமகாந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org